## வலிமிகும் இடங்களை அறிந்து சேர்த்தெழுதுக.

1. அறிவழகன் கடைக்குச் சென்றான். சில அழகிய பொம்மைகளை [அங்கு + கண்டான்.]
2. பல வண்ண பொம்மைகளை [இங்கு + பார்க்கலாம்] என்று கடைக்காரர் கூறினார்.
3. [எங்கு + தேடியும்] இதுபோன்ற பொம்மைகள் எனக்குக் கிடைக்கவில்லை என்று கடைக்காரரிடம் சொன்னான்.

பள்ளி விடுமுறை நாளில் நண்பர்கள் மூவரும் [அங்கு + கூடினர் .] [எங்கு + பார்த்தாலும்] பசுமையாக இருந்தது. [அங்கு + பெரிய] ஆலமரங்கள் சில இருந்தன. நண்பர்கள் மூவரும் [எங்கு + செல்ல] நினைத்தாரோ அவ்விடத்தை வந்தடைந்தனர்.

முதலில் [அங்கு + கூடாரம்] ஒன்றனை அமைத்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு அருகிலுள்ள ஆற்றில் குளித்தனர். [அங்கு + சிறிய] மீன்களைப் பிடித்தனர். "வாருங்கள் [அங்கு + சிதறிய] குப்பைகளை அகற்றுவோம்." என்றான் நண்பர்களில் ஒருவன். மூவருமாகச் சேர்ந்து [அங்கு + கிடந்த] குப்பைக் கூளங்களைச் சுத்தம் செய்தனர். [அங்கு + பிடித்த] மீன்களைப் பங்கிட்டு எடுத்துக் கொண்டு களிப்புடன் வீடு திரும்பினர்.

| | | | |
|---|---|---|---|
| அங்குக் கண்டான். | இங்குப் பார்க்கலாம் | அங்குச் சிறிய | அங்குச் சிதறிய |
| அங்குக் கிடந்த | எங்குத் தேடினாலும் | அங்குப் பிடித்த | அங்குப் பெரிய |
| அங்குக் கூடாரம் | எங்குச் செல்ல | எங்குப் பார்த்தாலும் | |
| அங்குக் கூடினர் | | | |

LIVEWORKSHEETS